சுருக்கம்

அரசியல் ஓய்வூதியம் – விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் இந்திய தேசிய படையில் பணிபுரிந்தவர்கள், அவர்களின் வாரிசுதாரர்கள் – ஓய்வூதியங்கள் உயர்த்தப்பட்டு ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (அரசியல் ஓய்வூதியம்–2) துறை

அரசாணை ( நிலை) எண்: 1185 நாள்: 3.7.2007

படிக்கப்பட்டது :

1. அரசு ஆணை நிலை எண். 2064, பொது (ஜெனரல்.சி) துறை, நாள் 28.9.1966.
2. அரசு குறிப்பாணை எண். 6841/86–3, பொது (ஜெனரல்.சி) துறை, நாள் 19.11.1966.
3. அரசு ஆணை நிலை எண். 2374, பொது (ஜெனரல்.பி) துறை, நாள் 29.7.1972.
4. அரசு ஆணை நிலை எண். 1336, பொது (ஜெனரல்.பி) துறை, நாள் 3.7.1979.
5. அரசு ஆணை நிலை எண். 175, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 29.1.1981.
6. அரசு ஆணை நிலை எண். 1294, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 1.7.1986.
7. அரசு ஆணை நிலை எண். 1420, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 23.8.89.
8. அரசு ஆணை நிலை எண். 124 , பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 25.1.1991.
9. அரசு ஆணை நிலை எண். 877, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 9.8.1992.
10. அரசு ஆணை நிலை எண். 877, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 21.9.1995.
11. அரசு ஆணை நிலை எண். 1243, பொது (அரசியல் ஓய்வூதியம்–II) துறை, நாள் 8.10.1997.

––––

ஆணை:

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு 1.10.1966 முதல் அரசியல் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்பட்டு ஆரம்பத்தில் மாதமொன்றிற்கு ரூ.50/– வழங்கப்பட்டது. மேற்கண்ட

ஓய்வூதியமானது படிப்படியாக உயர்த்தப்பட்டு இறுதியில் பார்வை 11–ல் படிக்கப்பட்ட ஆணையில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.3,000/–மும், அவர்களின் வாரிசுதாரர்களான மனைவி/கணவர்/முதிர் வயதடையாத குழந்தைகள் ஆகியோருக்கு மாதமொன்றிற்கு ரூ.1,500/– ஆகவும் உயர்த்தப்பட்டது.

2. பல்வேறு சுதந்திரப் போராட்ட சங்கங்கள் மேற்சொன்ன விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி தர நீண்டகாலமாக கோரிக்கை வைத்தன. மேற்கண்ட கோரிக்கையைத் தொடர்ந்து, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மேற்கண்ட ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்குவதாகச் சட்டமன்றத்தில் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்கள்.

3. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் இந்திய தேசிய படையில் பணிபுரிந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியம் மாதம் ஒன்றிற்கு ரூ.3,000/–லிருந்து ரூ.4,000/– ஆகவும், விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகளான மனைவி/கணவர்/முதிர் வயதடையாத குழந்தைகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வந்த மாநில அரசு குடும்பத் தொடர் ஓய்வூதியம் மாதமொன்றிற்கு ரூ.1,500/–லிருந்து ரூ.2,000/– ஆகவும் உயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது. மேற்சொன்ன ஓய்வூதிய உயர்வுகள் 1.5.2007 லிருந்து செயல்படுத்தப்படும்.

4. மேற்கண்ட செலவினமானது “புது துணைப் பணித் திட்டம்” ( New Instrument of Service) ஆகும். இதற்குச் சட்டமன்றத்தின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினமானது முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ( Contingency Fund ) முன்பணமாக பெறப்பட்டு மேற்கொள்ளப்படும். இது தொடர்பான ஆணைகள் நிதி (வ.செ.பொது–I)துறையால் வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன்பணத் தொகையைக் குறிப்பிட்டு இந்த அரசாணை நகலை இணைத்து செயலாளர், பொது (அரசியல் ஓய்வூதியம்–2)துறை, நிதி (BG–I) துறையிடம் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பண ஒப்பளிப்புக்காக உரிய படிவத்தில் விண்ணப்பிக்கப்பட வேண்டும். சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் 2007–2008–க்கான துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) இச்செலவினத்தைச் சேர்க்க பொது (அரசியல் ஓய்வூதியம்–2)த் துறை தேவையான செயற்குறிப்பை அனுப்பப்படவேண்டும்.

5. மேற்கண்ட செலவினமானது “ 2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – I. திட்டத்தில் சேராதது – AF விடுதலை வீரர்கள், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் ஓய்வூதியங்கள் – 27 ஓய்வூதியங்கள் – 05 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள் “ (DPC 2235 60 102 AF 2754) மற்றும் “ 2235– சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102 சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் – I. திட்டத்தில் சேராதது – AG ஓய்வூதியங்களைப் பணவிடைமூலம் அனுப்பும் செலவு –05 அலுவலகச் செலவுகள் – 04 அலுவலகப் பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவு “ (DPC 2235 60 102 AG 0549) என்ற தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்படும்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 37995/2007, நாள் 12.6.2007– இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.273 (இருநூற்று எழுபத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ. ஜோதி ஜெகராஜன்,
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவர்கள்.
ஓய்வூதியம் வழங்கல் அலுவலர்,
முதல் மாடி, ஈ.வெ.கி. சம்பத் மாளிகை, கல்லூரிச் சாலை, சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை–18 ( பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை–35 ( பெயரில்)
ஆணையர், கருவூலக் கணக்கு அலுவலகம், பனகல் கட்டிடம்,
1, ஜுனிஸ் சாலை, சைதாப்பேட்டை, சென்னை–15.

<u>நகல்:</u>
முதலமைச்சரின் செயலர், சென்னை–9.
நிதி (பொது) துறை, சென்னை–9.
நிதி (BG-I) துறை, சென்னை–9.
நிதி (BG II)துறை, சென்னை–9.

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.